Private E-Sevai Center
CSC Center
STAR RAINBOW SERVICES
VADAPALANI
8144337349

ஹலோ மிரர் மெட்ராஸ்
RNI No.TNBIL/2021/81709
hellomadrasdaily@gmail.com
தினசரி காலை நாளிதழ்
உள்ளது உள்ளபடி

KARUNAII TRUST
மாவளர்ச்சி குன்றியவர்களுக்கான இலவச
அன்னை சிறப்பு பள்ளி
Contact :
98413 59935

மலர் 3 | சென்னை | தினசரி | 4 பக்கம் | சனிக்கிழமை, ஜனவரி 27 2024 | இதழ் 195

# பா.ஜ.க. மீண்டும் ஒருமுறை ஆட்சிக்கு வரக்கூடாது! இதுதான் நம்முடைய இலக்கு! “இந்தியா கூட்டணி அமைத்தார்கள்! இந்தியாவில் ஆட்சியைக் கைப்பற்றினார்கள்!“ இதுதான் வரலாறாக இருக்க வேண்டும்! - மு.க.ஸ்டாலின்




சென்னை, 27 ஜனவரி 2024: திருச்சி - சிறுகனூரில் விடுதலை சிறுத்தைகள் கட்சி சார்பில் நடைபெற்ற ”வெல்லும் சனநாயகம்” மாநாட்டில் ஆற்றிய உரையின் விவரம் வருமாறு:

"இப்படை தோற்கின் எப்படை வெல்லும்?" என்பதற்கு இலக்கணமாகத் தீரர்கள் கோட்டமாம் திருச்சியில் அருமைச் சகோதரர் திருமாவளவன் அவர்களின் படை வீரர்கள் ஜனநாயகம் காக்க கூடியிருக்கிறீர்கள்!

அருமைச் சகோதரர் தொல்.திருமாவளவன் அவர்களை அவர் சட்டக்கல்லூரி மாணவராக - மாணவர் தி.மு.க.வில் பணியாற்றிய காலத்தில் இருந்தே தெரியும்! அப்போதே கல்லூரி மேடைகளிலும் - கழக மாணவரணி மேடைகளிலும் அவரின் பேச்சு, கொள்கை கர்ஜனையாக இருக்கும்!

நாள்தோறும் கொள்கை உரம் வலுப்பெறும் இளம் காளையாகத்தான் இன்றைக்கும் ஜனநாயகம் காக்க இந்தக் கூட்டத்தைக் கூட்டியிருக்கிறார். அன்றைக்குக் கழகத்துக்குள்ளே முழங்கினார்! இன்றைக்கு கழகக் கூட்டணிக்குள் இருந்து முழங்கி வருகிறார்!

சகோதரர் திருமா அவர்கள், எப்போதும் - எந்த சூழ்நிலையிலும் எங்களுக்கு உள்ளே இருப்பவர்! மன்னிக்கவும் நமக்குள்ளே இருப்பவர்! தலைவர் கலைஞருக்கு மட்டுமல்ல எனக்கும் தோளோடு தோளாக துணை நிற்பவர் சகோதரர் திருமா அவர்கள்!

நாங்கள் எப்போதும் தமிழினத்தின் வலிமைக்கு உரம் சேர்க்கும் அடிப்படையில்தான் இணைந்து இயங்குகிறோம். நமக்கிடையே இருப்பது தேர்தல் உறவு அல்ல; அரசியல் உறவு அல்ல; கொள்கை உறவு! தந்தை பெரியாரையும் - புரட்சியாளர் அம்பேத்கரையும் யாராலாவது பிரிக்க முடியுமா? அதுபோலதான், திராவிட முன்னேற்றக் கழகமும் - விடுதலைச் சிறுத்தைகளும்!

புரட்சியாளர் அம்பேத்கர் பிறந்த மண்ணில் மரத்வாடா பல்கலைக் கழகத்துக்கு அம்பேத்கர் பெயர் வைக்கவும் தலைவர் கலைஞர்தான் காரணம்! தந்தை பெரியார் மண்ணில் சென்னை சட்டக் கல்லூரிக்கு டாக்டர் அம்பேத்கர் சட்டக்கல்லூரி என்று பெயர் வைத்ததும், டாக்டர் அம்பேத்கர் சட்டப் பல்கலைக்கழகம் உருவாக்கியதும் தமிழினத் தலைவர் கலைஞர்தான்! புரட்சியாளர் அம்பேத்கரை உயர்த்தி பிடிக்கும் இயக்கம்தான், திராவிட முன்னேற்றக் கழகம்!

புரட்சியாளர் அம்பேத்கரைப் போற்றுகின்ற - பட்டியலின மக்களின் நலனைப் பாதுகாக்கிற அரசுதான், நமது திராவிட மாடல் அரசு! சிலவற்றை மட்டும் தலைப்புச் செய்திகளாக பட்டியலிட விரும்புகிறேன்!

அண்ணல் அம்பேத்கர் பிறந்தநாளை, சமத்துவ நாளாக அறிவித்தோம்! சகோதரர் திருமாவளவன் அவர்களின் கோரிக்கையை உடனடியாக ஏற்று, அம்பேத்கர் நினைவு மண்டபத்தில் அண்ணலின் சிலையை அமைத்து, நானே திறந்து வைத்தேன். அண்ணலின் படைப்புகளைச் செம்பதிப்புகளாக விரைவில் வெளியிட இருக்கிறோம்! ஆதிதிராவிடர் - பழங்குடியினர் ஆணையத்தை புதுப்பித்து உயிரூட்டினோம்.

நடத்தப்படாமல் இருந்த விழிப்புணர்வு கூட்டங்களை ஆறு மாதத்துக்கு ஒருமுறை நடத்தினோம். திராவிடப் பேரொளி அயோத்திதாசரின் சிலையை சென்னையில் திறந்து வைத்தோம். அண்ணல் அம்பேத்கர் பெயரால் தொழில் முனைவோர் நிதியும், அயோத்திதாசர் பெயரால் வீடுகட்டும் திட்டமும் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

தந்தை பெரியாரும் - பேரறிஞர் அண்ணாவும் - தமிழினத் தலைவர் கலைஞரும் உருவாக்கிய திராவிட - தமிழின உணர்வின் வெளிப்பாடுகளாகத்தான் இதையெல்லாம் நிறைவேற்றிக் காட்டி வருகிறோம்.

சமூகநீதி - சமத்துவச் சிந்தனை கொண்ட ஆட்சியை இந்தியா முழுமைக்கும் அமைக்க வேண்டும் என்பதற்காக சகோதரர் தொல். திருமாவளவன் இந்த ‘வெல்லும் ஜனநாயகம்‘ மாநாட்டை கூட்டியிருக்கிறார். "வெல்லும் ஜனநாயகம்" என்று சொன்னால் மட்டும் போதாது! நாம் எல்லோரும் இணைந்து செயல்பட்டாக வேண்டும்! இதுக்கான கட்டளையை பிறப்பிக்கத்தான் இந்த மாநாட்டை கூட்டி, சர்வாதிகார பா.ஜ.க. அரசை தூக்கி எறிவோம்! ஜனநாயக அரசை நிறுவுவோம்! என்று சபதம் ஏற்று மிக முக்கியமான 33 தீர்மானங்களை இந்த மாநாட்டில் நிறைவேற்றியிருக்கிறார் சகோதரர் திருமாவளவன் அவர்கள்! இந்த சபதமும் வருகின்ற நாடாளுமன்றத் தேர்தலில் மக்களால் நிறைவேற்றப்படும் என்பது உறுதி!

இந்தியாவை உண்மையான கூட்டாட்சி நாடாக மாற்ற வேண்டிய கடமையும் பொறுப்பும் நமக்குத்தான் இருக்கிறது. ஒன்றியத்தில் கூட்டாட்சி அரசையும், மாநிலங்களில் சுயாட்சி அரசையும் உருவாக்க வேண்டும். அதனால்தான், குடியரசு நாளான இன்றைக்கு இந்த மாநாட்டை கூட்டியிருக்கிறார். இந்திய அரசியலமைப்புச் சட்டத்தில் சொல்லப்பட்டிருக்கும் மக்களாட்சி மாண்புகள் காக்கப்பட வேண்டும் என்றால், ஜனநாயகம் வென்றாக வேண்டும்! அப்போதுதான், கூட்டாட்சி மலரும்! கூட்டாட்சியை சுட்டிக்காட்ட நாம் பயன்படுத்தும் ‘ஒன்றிய அரசு‘ என்ற சொல்லை ‘யூனியன் ஆப் ஸ்டேட்ஸ்’ என்று பயன்படுத்தியவரே புரட்சியாளர் அம்பேத்கர்தான்!

அரசியலமைப்புச் சட்டம் கொடுத்த அண்ணல் அம்பேத்கர் என்ன சொல்லியிருக்கிறார்... "யூனியன் அரசும், மாநில அரசும் தனித்தனி அதிகாரம் பெற்றவை! ஒன்று மற்றொன்றுடன் அடிபணியவில்லை; ஒருங்கிணைக்கப்பட்டு உள்ளது" என்று சொன்னார். அதைத்தான் நாமும் சொல்கிறோம்! "மாகாணங்கள் தெள்ளத் தெளிவான சகலவித தேசிய இன அம்சங்களையும் கொண்டிருக்கின்றன. எனவே, அவற்றின் தேசியப் பண்பு முழுநிறைவாய் வளர்ந்து மலர சுதந்திர வாய்ப்பு அளிக்கப்பட வேண்டும்" என்றும் புரட்சியாளர் அம்பேத்கர் சொல்லியிருக்கிறார்.

இத்தகைய எண்ணம் கொண்ட ஒரு ஒன்றிய அரசை நாம் உருவாக்க வேண்டும்! அதற்கு தொடக்கமாக பா.ஜ.க. ஆட்சி அகற்றப்பட வேண்டும்! தமிழ்நாட்டில் பா.ஜ.க. என்பது, பூஜ்யம்! அதனால் தமிழ்நாட்டில் பா.ஜ.க.வை பற்றி கவலைப்பட வேண்டியதில்லை. தமிழ்நாட்டில் மட்டும் பா.ஜ.க.வை வீழ்த்தினால் போதாது! அகில இந்தியா முழுவதும் பா.ஜ.க.வை வீழ்த்த வேண்டும்! அதற்கான அடித்தளம்தான் இந்தியா கூட்டணி! ஒன்றிய அளவில் ஆட்சியில் இருக்கும் பா.ஜ.க. ஆட்சியை வீழ்த்துவதை இலக்காக கொண்ட எல்லா கட்சிகளும் இந்த கூட்டணியில் இணைந்திருக்கிறது!

பா.ஜ.க. என்று சொல்வதால், இது தனிப்பட்ட ஒரு கட்சிக்கு எதிரான கூட்டணி என்று சுருக்கிவிட முடியாது! இந்தியாவின், ஜனநாயகத்தை - மக்களாட்சியை - மதச்சார்பின்மையை - பன்முகத்தன்மையை - ஒடுக்கப்பட்ட மக்களை - ஏழை எளிய மக்களை காப்பாற்ற வேண்டும் என்றால் பா.ஜ.க. மீண்டும் ஒருமுறை ஆட்சிக்கு வரக்கூடாது! இதுதான் நம்முடைய இலக்கு!

பா.ஜ.க. மீண்டும் ஆட்சிக்கு வந்தால், இந்தியா என்ற கூட்டாட்சி அமைப்பே இருக்காது. ஜனநாயக அமைப்பு முறையே இருக்காது. நாடாளுமன்ற நடைமுறையே இருக்காது. ஏன்... மாநிலங்களே இருக்காது! இதை எல்லோரும் உணர்ந்து கொள்ள வேண்டும்! மாநிலங்களை கார்ப்பரேஷன்களாக ஆக்கிவிடுவார்கள்! கண்ணுக்கு முன்பே ஜம்மு காஷ்மீர் சிதைக்கப்பட்டதை பார்த்தோம். ஜம்மு காஷ்மீரை இரண்டாக பிரித்து - யூனியன் பிரதேசங்களாக ஆக்கினார்கள். தேர்தல் கிடையாது! அரசியல் கட்சித் தலைவர்களுக்கு வீட்டுச் சிறை! இதுதான் பா.ஜ.க. பாணி சர்வாதிகாரம்! அந்த நிலைமைதான் எல்லா மாநிலங்களுக்கும் ஏற்படும்.

கேள்விகள் இல்லாத நாடாளுமன்றம்! 140 எம்.பி.க்கள் சஸ்பெண்ட்! இது நாடாளுமன்ற ஜனநாயகத்துக்கு அவமானம் இல்லையா? உலக நாடுகள் என்ன நினைக்கும்? சிரிக்க மாட்டார்களா? "உலகின் பெரிய ஜனநாயக நாடு என்று சொல்லிக் கொள்கிறீர்களே, நான்கில் ஒரு பங்கு உறுப்பினர்களை சஸ்பெண்ட் செய்வதுதான் உங்கள் ஜனநாயகமா என்று கேட்க மாட்டார்களா? உலக நாடுகள் மத்தியில் இந்தியாவுக்கு மிகப்பெரிய தலைகுனிவை ஏற்படுத்திய ஆட்சியாக பா.ஜ.க. ஆட்சி இருக்கிறது. இன்னும் சொல்ல வேண்டும் என்றால், இந்தியாவை சர்வாதிகார நாடாக மாற்றினாலும் மாற்றிவிடுவார்கள்!

நமக்கு முன்னால் இருக்கும் நெருக்கடி, நாம் உணர்ந்திருப்பதை விட மிக மோசமானது! மிக மிக மோசமானது!

அகில இந்திய அரசியல் தலைவர்கள் இங்கு வந்திருக்கிறீர்கள். உங்களுக்கு நான் அதிகமாக விளக்க வேண்டிய தேவை இல்லை! மாநிலத்துக்கு மாநிலம் அரசியல் நிலைமை மாறுபடும்! ஆனால் நடக்கப்போவது நாடாளுமன்றத் தேர்தல்! ஒன்றியத்தில் யார் ஆட்சி நடக்க வேண்டும் என்பதை மட்டும் மனதில் வைத்து எல்லோரும் செயல்பட வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். பா.ஜ.க. ஆட்சிக்கு வரக்கூடாது என்ற ஒற்றை லட்சியம்தான் எல்லோருக்கும் இருக்க வேண்டும்! பா.ஜ.க.வுக்கு எதிரான வாக்குகள் எந்தக் காரணம் கொண்டும் சிதறக்கூடாது! பகைவர்களோடு சேர்த்து துரோகிகளையும் மக்களிடையே அடையாளம் காட்ட வேண்டும்!

வரலாறு என்ன சொல்ல வேண்டும் தெரியுமா? "இந்தியா கூட்டணி அமைத்தார்கள்! இந்தியாவில் ஆட்சியைக் கைப்பற்றினார்கள்!" இதுதான் வரலாறாக இருக்க வேண்டும்!

ஒரே ஒரு எடுத்துக்காட்டை சொல்ல விரும்புகிறேன். சண்டிகர் மாநகர மேயர் தேர்தல் நடக்க இருந்தது. பா.ஜ.க.வுக்கு 14 உறுப்பினர்கள்! ஆம் ஆத்மி கட்சிக்கு 13 உறுப்பினர்கள்! காங்கிரஸ் கட்சிக்கு 7 உறுப்பினர்கள்! ஆம் ஆத்மி கட்சியும், காங்கிரஸ் கட்சியும் கூட்டணி! மேயர் பதவியை இந்தியா கூட்டணி கைப்பற்றும் நிலைமை உருவானது! இந்தியா கூட்டணியின் முதல் வெற்றியாக இது அமையப் போகிறது என்று வடமாநில ஊடகங்களில் எழுதினார்கள். உடனே என்ன செய்தார்கள் தெரியுமா? தேர்தலையே ரத்து செய்துவிட்டார்கள்!

ஒரு மேயர் தேர்தலையே கேன்சல் செய்கிறார்கள் என்றால், பா.ஜ.க.வுக்கு ஏற்பட்டுள்ள பயத்தை இந்தியா கூட்டணி தலைவர்கள் உணர்ந்தாக வேண்டும். இதை நாம் பயன்படுத்திக் கொள்ள வேண்டும்! இப்போது கிடைத்திருக்கும் வாய்ப்பை இறுகப் பற்றிக் கொள்ள வேண்டும்! நாம் ஒற்றுமையாக இருந்தால் நிச்சயமாக பா.ஜ.க. தோற்கடிக்கப்படும்! ஜனநாயகம் வெல்லும்! அதனைக் காலம் சொல்லும்! தொல். திருமாவளவனும் வெல்வார்! அதையும் காலம் சொல்லும்! நன்றி! வணக்கம்! இவ்வாறு அவர் உரையாற்றினார்.




PASSPORT | MSME | PAN | AADHAAR
FSSAI | PATTA | LEGALHEIR
2,4 WHEELER INSURANCE
PROPERTY TAX, EB - NAME TRANSFER
STATE AND CENTRAL GOVT
AUTHORISED FRANCHISEE
ALL ONLINE SERVICES
இ-சேவை மையம்
ஸ்டார் ரெயின்போ சர்வீசஸ்
11,SOUTH PERUMAL KOIL STREET, VADAPALANI, CHENNAI - 600 026.
8148231942 / 8144337349
பொது இ-சேவை மையம்

ஹலோ மிரர் மெட்ராஸ்
hellomadrasdaily@gmail.com
தினசரி காலை நாளிதழ்
உள்ளது உள்ளபடி



# தடகளப் போட்டிகளில் சாதித்து வரும் இளைஞர் அஸ்வின் மணிகண்டன்













சென்னை, 27 ஜனவரி 2024: சென்னை அயன்புரம் பகுதியில் வசித்து வரும் இளைஞர் அஸ்வின் மணிகண்டன் தடகளப் போட்டிகளில் கலந்து கொண்டு பல சாதனைகளை படைத்து வருகிறார். இவர் தற்போது சென்னை முகப்பேர் மேற்கில் அமைந்துள்ள மார் கிரிகோரியோஸ் கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் பி.பி.ஏ. இரண்டாம் ஆண்டு பயின்று வருகிறார். இவர் மாவட்ட அளவிலும் மாநில அளவிலும் பல்வேறு விதமான அமைப்புக்கள் நடத்திய தடகளப் போட்டிகளில் பங்கேற்று பல பரிசுகளை வென்றுள்ளார். நேரு ஸ்டேடியத்தில் கிட்டோஸ் நிறுவனம் நடத்திய மாநில அளவில் நடைபெற்ற தடகளப் போட்டிகளில் பங்கேற்று 400 மீ ஓட்டத்திலும் 200 மீ ஓட்டத்திலும் முதலிடம் பெற்று சாதனை படைத்தார். மேலும் நீளம் தாண்டுதல் மற்றும் மூன்று தாண்டுதல் போட்டிகளில் பங்கேற்று இரண்டாம் இடம் பெற்றார். இந்த விளையாட்டு விழாவில் இவர் சிறந்த தடகள விளையாட்டு வீரராக அமைப்பாளர்களால் தேர்வு செய்யப்பட்டு சான்றிதழ், பதக்கம் மற்றும் கேடயம் வழங்கி சிறப்பிக்கப்பட்டார். இவர் பயிலும் மார் கிரிகோரியோஸ் கலை மற்றும் அறிவியல் கல்லூரி சார்பில், மாவட்ட அளவில் நடைபெற்ற கிட்டோஸ் அத்தலெட்டிக் விளையாட்டு விழாவின் பல்வேறு தடகளப் போட்டிகளில் பங்கேற்று வெற்றி பெற்று சிறப்பு விருந்தினர்களால் பாராட்டுப் பெற்றார்.இவர் தினமும் காலை மற்றும் மாலை தான் பயிலும் கல்லூரியின் விளையாட்டு மைதானத்தில் மூன்று மணி நேரம் பயிற்சி மேற்கொண்டு, தடகளப் போட்டிகளில் பங்கேற்று சாதிக்க வேண்டுமென்ற எண்ணம் உள்ள மாணவ மாணவிகளுக்கு வழிகாட்டியாக இருந்து வருகிறார். இவரின் சாதனைகளுக்கு தடகளப் பயிற்சியாளர் திரு மேக்ஸ்வெல் அவர்களும் மார் கிரிகோரியோஸ் கலை மற்றும் அறிவியல் கல்லூரியின் விளையாட்டு துறையின் உடற் கல்வி இயக்குனர் திரு நல்லரசு அவர்களும் உடற்கல்வி ஆசிரியைகள் திரு லெனார்ட் சாலமன், திருமதி கேப்ரியல்லா கிளாடிஸ் மற்றும் திருமதி ப்ரீத்தி அனில்குமார் அவர்களின் தொடர்ச்சியான உற்சாகப் படுத்துதலும், ஊக்கமும் ,உதவியுமே காரணம் என்கிறார் அஸ்வின் மணிகண்டன்.



தமிழ் மாநில காங்கிரஸ் தலைமை அலுவலகத்தில் ஜி.கே. வாசன் எம்.பி. தேசிய கொடியை ஏற்றினார். தலைமை நிலைய செயலாளர் ஜி ஆர் வெங்கடேஷ்,சக்தி வடிஎல்வேல், மாவட்டத் தலைவர்கள் சைதை மனோகரன், முனவர் பாஷா,அருண்குமார், கோவிந்தசாமி, வி.கே.மனோகரன் மற்றும் நிர்வாகிகள் பி.சந்திரன், டி.என்.அசோகன் சென்னை நந்துசிவபால் லீக் மோகன்,மாணவரணி பி கே சங்கர், கே.டி.எஸ்.ராஜா, எல்.கே வெங்கட், இலக்கிய அணி கே.ஆர்.டி ரமேஷ்,பட்டுக்கோட்டை பூபதி, சேப்பாக்கம் சுரேஷ் ,இளவரி,கல்யாணி மயிலை விவேக், கேஸ் பீட்டர்,டைல்ஸ் முருகன் மற்றும் பலர் கலந்து கொண்டனர்.

# இராதாகிருஷ்ணன் பார்த்திபன் இயக்கத்தில் உருவாகி வரும் 'டீன்ஸ்' திரைப்படம் வெளிவருவதற்கு முன்பே புதிய உலக சாதனை படைத்துள்ளது



சென்னை, 27 ஜனவரி 2024: நடிகரும் இயக்குநருமான இராதாகிருஷ்ணன் பார்த்திபனின் புதிய திரைப்படமான 'டீன்ஸ்', தணிக்கை சான்றிதழுடன் திரையரங்குகளில் முதல் பார்வை வெளியான முதல் படம் என்ற புதிய உலக சாதனையை படைத்துள்ளது. இந்த சாதனைக்கான சான்றிதழை புதன்கிழமை (ஜனவரி 24) சென்னையில் நடைபெற்ற விழாவில் இராதாகிருஷ்ணன் பார்த்திபன் மற்றும் படக்குழுவினருக்கு உலக சாதனைகளின் அதிகாரப்பூர்வ பதிவு அமைப்பான வேர்ல்ட் ரெக்கார்ட்ஸ் யூனியன் அலுவலர்கள் வழங்கினர்.

இந்த நிகழ்வில், இசையமைப்பாளர் ஸ்ரீ. இமானின் பிறந்தநாளை 'டீன்ஸ்' படக்குழுவினர் உற்சாகமாகக் கொண்டாடி, இமான் மற்றும் அவரது குடும்ப உறுப்பினர்களை ஆச்சரியத்தில் ஆழ்த்தினர். இமானின் தந்தை ஜெ. டேவிட், மனைவி அமேலியா மற்றும் மகள் நேத்ரா ஆகியோர் நிகழ்வில் கலந்து கொண்டனர்.

நிகழ்ச்சியில் பேசிய இமான், இன்ப அதிர்ச்சிக்கு பார்த்திபனுக்கு நன்றி தெரிவித்ததோடு, தனது 23 வருட சினிமா பயணத்தில் இந்த பிறந்தநாள் மறக்க முடியாததாக இருக்கும் என்றார். "இத்தனை வருடங்களில் நான் பல ஏற்ற தாழ்வுகளைக் கண்டிருக்கிறேன். சில பிறந்தநாள்கள் மகிழ்ச்சியாக இருந்தன, சில அப்படி இருந்ததில்லை, ஆனால் இந்த பிறந்தநாள் என் இதயத்தில் என்றென்றும் நிலைத்திருக்கும்," என்று அவர் கூறினார்.

தொடர்ந்து பேசிய அவர், "பார்த்திபன் சாருடன் பணியாற்றுவது கடினம் என்று பலர் சொன்னார்கள், ஆனால் அவர் மிகவும் கூலாக இருக்கிறார். சினிமா மீதான அவரது அர்ப்பணிப்பும் ஆர்வமும் அசாதாரணமானது. 'டீன்ஸ்' படத்திற்கு ஓரிரு பாடல்கள் மட்டும் போதும் என்று முதலில் நினைத்தோம், கடைசியில் எட்டு பாடல்களை உருவாக்கி உள்ளோம். அவற்றில் பெரும்பாலானவை பார்த்திபன் சாரே எழுதியவை. நாங்கள் இருவருமே வித்தியாசத்தை விரும்புவர்கள், எனவே நாங்கள் மிக்க மகிழ்ச்சியுடன் இணைந்து பணியாற்றினோம். சில பாடல்களில் அவர் திருப்தி அடைந்த பிறகும், நான் அவற்றை மேலும் மேலும் மெருகேற்றுவேன். பத்திரிகையாளர்கள் தங்களின் ஆக்கபூர்வமான விமர்சனங்கள் மற்றும் பாராட்டுகளால் இத்தனை ஆண்டுகளாக என்னை ஆதரித்து வருகிறார்கள். 'டீன்ஸ்' படத்திற்கு ஆதரவு தருமாறு அவர்களை கேட்டுக்கொள்கிறேன்," என்றார்.

உலக சாதனைகள் அமைப்பின் அலுவலர் ஷெரிபா கூறுகையில், "திரைப்படத்துறையில் புதிய சாதனையை 'டீன்ஸ்' படைத்துள்ளது. இதற்காக படக்குழுவினரை மனதார வாழ்த்துகிறோம். இது ஒரு பெரிய சாதனை," என்றார்.

உலக சாதனை அமைப்பின் பிராந்திய தலைமை அலுவலர் கிறிஸ்டோபர் டெய்லர் கிராஃப்ட் கூறுகையில், "இந்த சாதனைக்கான சான்றிதழை 'டீன்ஸ்' குழுவினருக்கு வழங்குவதில் பெருமை கொள்கிறோம். உலகத்திலேயே முதல் முறையாக இத்தகைய ஒரு முயற்சியை 'டீன்ஸ்' குழு வெற்றிகரமாக மேற்கொண்டுள்ளது. இந்தியாவுக்கு அவர்கள் பெருமை சேர்த்துள்ளனர். அவர்களுக்கு எங்களது மனமார்ந்த வாழ்த்துகள்" என்றார்.

'டீன்ஸ்' படத்தின் தயாரிப்பாளர்களில் ஒருவரான ரஞ்சித் தண்டபாணி, இசையமைப்பாளர் இமானுக்கு பிறந்தநாள் வாழ்த்தும் உலக சாதனை படைத்ததற்காக□ 'டீன்ஸ்' குழுவுக்கு வாழ்த்தும் தெரிவித்தார்.

தயாரிப்பாளர் கால்டுவெல் வேள்நம்பி பேசுகையில், "இமானின் பிறந்தநாளைக் கொண்டாடுவதில் மகிழ்ச்சி அடைகிறோம். 'டீன்ஸ்' படத்துக்கு சிறப்பான பங்களிப்பை அவர் அளித்துள்ளார். பார்த்திபன் மற்றும் அவரது குழுவினர் 10 படங்களுக்கு தேவையான உழைப்பை இந்த ஒரு படத்திற்கு கொடுத்துள்ளனர். அவரது கடின உழைப்பு என்றென்றும் தொடர வேண்டும் என மனதார வாழ்த்துகிறேன்," என்றார்.

இராதாகிருஷ்ணன் பார்த்திபன் தனது உரையில், "நான் கடந்த 33-34 வருடங்களாக சினிமா துறையில் இருக்கிறேன். வித்தியாசமான படங்களை உருவாக்குகிறேன் என்று எல்லோரும் சொல்கிறார்கள். சினிமாவில் நிலைத்து நிற்க வேண்டும் என்பதற்காகவே அவ்வாறு செய்கிறேன். அதனால், 'ஒத்த செருப்பு', 'இரவின் நிழல்' படங்களுக்குப் பிறகு இப்போது 'டீன்ஸ்' செய்கிறேன். இந்தப் படத்தின் முதல் பார்வையை திரையரங்குகளில் வெளியிட நினைத்தேன், ஆனால் அதற்கு சென்சார் சான்றிதழ் தேவைப்பட்டது. சென்சார் அதிகாரிகளை நான் அணுகியபோது, ஒரு படத்தின் முதல் பார்வைக்கு சான்றிதழ் அளிப்பது இதுவே முதல்முறை என்றார்கள். உடனடியாக நான் அதை பெறுவதற்கான வேலையை செய்தேன், இப்படித்தான் இது சாத்தியமானது," என்றார்.

அவர் மேலும் கூறியதாவது: "இந்த படத்தின் தயாரிப்பாளர்கள் தான் 'டீன்ஸ்' உருவாவதற்கு முக்கிய காரணம். 'இரவின் நிழல்' படத்தை அவர்கள் தான் தயாரித்தனர். முதல் நான்-லீனியர் சிங்கிள்-ஷாட் படம் என்ற அங்கீகாரத்தை அது எனக்குக் கொடுத்தாலும், அவர்களுக்கு அதிகப் பணத்தை 'இரவின் நிழல்' ஈட்டித் தர□வில்லை. ஆனாலும் எனக்கு ஆதரவாக இருக்க வேண்டும் என்ற ஒரே காரணத்திற்காக 'டீன்ஸ்' படத்தைத் தயாரிக்க முன்வந்தார்கள். இந்தப் படம் அவர்களுக்கு லாபம் தரும் என்று நம்புகிறேன். ஏனென்றால் 13 குழந்தைகளை முக்கிய வேடத்தில் நடிக்க□ வைத்து குழந்தைகளுக்காக இந்தப் படத்தைத் உருவாக்கியுள்ளேன்.

இந்தப் படம் சோதனை முயற்சியாக□ இருக்காது, அதே சமயம் முற்றிலும் வித்தியாசமான அனுபவமாக இருக்கும். இளையராஜா சார், ஏ.ஆர். ரஹ்மான் சார் மற்றும் சி. சத்யா சார் ஆகியோருடன் நான் பணிபுரிந்திருக்கிறேன். இமானுடன் நீண்ட காலமாக பணியாற்ற விரும்பினேன், அது இப்போது தான் நடந்துள்ளது. 'மைனா' நாட்களில் இருந்து அவரை நான் ர□சிக்கிறேன். பாடல் வரிகளுக்கு அதிக முக்கியத்துவத்தை இமான் கொடுக்கிறார். 'டீன்ஸ்' படத்தின் தூண்களாக□ ஒளிப்பதிவாளர் காவ்மிக் ஆரியும் மற்றும் இமானும் திகழ்கிறார்கள். முதல் பார்வையில் அசத்தலான காட்சிகளை பார்த்திருப்பீர்கள். ஏழு சிறந்த பாடல்களை இமான் கொடுத்துள்ளார். பின்னணி இசையில் அவர் என்ன செய்யப் போகிறார் என்று பார்க்க ஆவலாக உள்ளேன். எனது அடுத்த படத்திற்கு வேறு ஒரு இசையமைப்பாளருடன் இணைந்து பணியாற்ற நினைத்தேன், ஆனால் இப்போது இமானுடன் தொடர்ந்து பணிபுரிய முடிவு செய்துள்ளேன். அவருடைய அர்ப்பணிப்பு அவ்வாறனது. இத்தனை ஆண்டுகளில் எனது ஒவ்வொரு முயற்சியையும் பத்திரிகையாளர்கள் தொடர்ந்து ஆதரித்து வருகிறார்கள். 'டீன்ஸ்' படம் வெளியாவதற்கு முன்பே உலக அளவில் அங்கீகாரம் பெற்றிருப்பதில் மகிழ்ச்சி அடைகிறேன்."

கால்டுவெல் வேள்நம்பி, டாக்டர் பாலசுவாமிநாதன், டாக்டர் பின்ச்சி ஸ்ரீநிவாசன் மற்றும் ரஞ்சித் தண்டபாணி ஆகியோர் இப்படத்தை தயாரித்துள்ளனர். பயாஸ்கோப் டிரீம்ஸ் எல் எல் பி மற்றும் அகிரா ப்ரொடக்ஷன்ஸ் பேனரில் 'டீன்ஸ்' தயாராகியுள்ளது. கீர்த்தனா பார்த்திபன் அக்கினேனி இதன் கிரியேட்டிவ் தயாரிப்பாளர். படத்தொகுப்புக்கு ஆர். சுதர்சன் பொறுப்பேற்றுள்ளார்.

# பன்னாட்டு அரிமா சங்கம் நடத்திய அறிவியல் கண்காட்சியில் சுற்றுச் சூழல் பாதுகாப்பினை முன்னிருத்தி முதல் பரிசை வென்ற அயன்புரம் ஊ.பு.அ.சௌந்திரபாண்டியன் மேல் நிலைப் பள்ளி மாணவ மாணவிகள்
















சென்னை, 27 ஜனவரி 2024: பன்னாட்டு அரிமா சங்கம் மாவட்டம் 324 எம் சார்பில் ஊ.பு.அ..சௌந்திரபாண்டியன் மேல் நிலைப் பள்ளி வளாகத்தில் சுற்றுச் சூழல் பாதுகாப்பினை முன்னிருத்தி சென்னை பள்ளி, அரசு மற்றும் அரசு உதவி பெறும் பள்ளிகளுக்கு இடையேயான அறிவியல் கண்காட்சி முதன்மை சிறப்பு விருந்தினர்

மாவட்ட ஆளுநர்,324எம் பி எம் ஜே எஃப் லயன்.எம்.ஸ்ரீதர் வழிகாட்டுதலின்படி,

மாவட்ட தலைவர், லயன்ஸ் சயின்ஸ் க்வெஸ்ட் எம் ஜே எஃப் லயன் டாக்டர்.எஸ்.எம்.பாஸ்கர் தலைமையில் ஈகோ.எஸ் ஒய் எஸ்'24 என்னும் தலைப்பில் 24-1-2024 அன்று சிறப்பாக நடைபெற்றது.இதில் 25 பள்ளிகளில் இருந்து 100 க்கும் மேற்பட்ட மாணவ மாணவிகள் பங்கு பெற்றனர். மேலும் இந்த அறிவியல் கண்காட்சியில், என் ஜி ஓ - அகஸ்தியா இண்டர்நேஷனல் பவுண்டேஷன் சார்பில் ஊ.பு.அ.சௌந்திரபாண்டியன் மேல் நிலைப் பள்ளியின் மாணவ மாணவிகள் செய்து காட்டி விளக்கம் அளித்த 30 க்கும் மேற்பட்ட அறிவியல் படைப்புகள் இடம் பெற்றன.இச் சீர்மிகு நிகழ்வில் பங்கேற்ற ஊ.பு.அ.சௌந்தரபாண்டியன் மேல் நிலைப் பள்ளி மாணவர்கள் பா.ஜெ . சுதர்சன் மற்றும் ஜெ.ஸ்ரீனிவாசன் ஆகியோர் 11மற்றும் 12 ம் வகுப்பிற்கான நிலையில்,அவர்களது "உலக வெப்பமயமாதலை தடுக்கும் வழிகள்"என்ற அறிவியல் படைப்பிற்கு முதல் பரிசு பெற்றனர்.மேலும் இப் பள்ளியின் பத்தாம் வகுப்பு மாணவிகள் ஏ.ஜனனி மற்றும் சஞ்ஜுஸ்ரீ.பி ஆகியோர் 9-10 ஆம் வகுப்பிற்கான நிலையில் "கடல் சுற்றுச் சூழல் மண்டலம் மற்றும் அதன் பாதுகாப்பு" எனும் படைப்பிற்கு முதல் பரிசை வென்றனர்.6-8 ஆம் வகுப்பிற்கான நிலையில் ஏழாம் வகுப்பு மாணவிகள் எஸ்.மலர் மற்றும் எஸ்.தனுஸ்ரீ தனது படைப்பான "கழிவு மேலாண்மை" க்கு இரண்டாம் பரிசினைப் பெற்றனர். அறிவியல் கண்காட்சியில் சிறப்பாக செயல்படுத்திய மாணவ மாணவிகளுக்கு ரொக்கப்பரிசும், கேடயம் மற்றும் சான்றிதழ்களை முதன்மை சிறப்பு விருந்தினர் அரிமா 324எம் மாவட்ட ஆளுநர் பி எம் ஜே எஃப் லயன். எம்.ஸ்ரீதர் வழங்கி வாழ்த்தினார். விழா பேருரை வழங்கி மாணவர்களை உற்சாகப் படுத்தினார்.

இவ்விழாவில் சயின்ஸ் க்வெஸ்ட் மாவட்ட தலைவர் எம் ஜே எஃப் லயன் டாக்டர்.எஸ்.எம்.பாஸ்கர் தலைமை தாங்கி வரவேற்புரை நிகழ்த்தினார். சி எஸ். லயன். செந்தில், சென்னை கோல்டன் சன் அரிமா சங்கத்தின், சார்பில் தலைவர் எம் ஜே எஃப் லயன் கே.சசிகுமார், ஆர் சி வி.பாலா, இசட் சி- லயன்.வி.ஞானசேகரன், ரொக்க பரிசு ஸ்பான்சர்கள் லயன். முருகேசன், லயன். வெங்கடேஷ், லயன். இளங்கோவன், லயன். நாச்சியப்பன், லயன். ரமேஷ், ஆர் சி, இசட் சி, தலவர் ஆகியோர் நன்கொடை வழங்கியதுடன் விழாவிலும் கலந்து கொண்டு விழாவினை சிறப்பித்தார்கள்.

அறிவியல் கண்காட்சியின் ஒருங்கினைப்பாளர்களான தலைமை ஆசிரியை ரா.சு.லதா, சீனியர் உயிரியல் ஆசிரியர் ஆர்.சௌந்தரபாண்டியன், அறிவியல் ஆசிரியர் ஆர்.தினகரன், உடற் கல்வி ஆசிரியர்கள் சி.ஆனந்தராஜ் மற்றும் சு.குமரேசன் , ஓவிய ஆசிரியர் எம். செந்தில், அலுவலகப் பணியாளர் சி. கௌரி சங்கர் மற்றும் பள்ளியின் அனைத்து துறை ஆசிரியர்கள், ஆசிரியைகள் அனைவரும் சிறப்பான முறையில் அனைத்து ஏற்பாடுகளையும் செய்திருந்தனர்.ஆசிரியைகள் ச. சசிகலா, கமலேஸ்வரி, பா.பொற்செல்வி , ஆ.ரேகா, அருள் மற்றும் மேல் நிலை மாணவிகளால் வரைந்த அறிவியல் ரங்கோலி கோலம் மற்றும் பூ அலங்காரம் அனைத்து பங்கேற்பாளர்கள் மற்றும் பார்வையாளர்களைமிகவும் கவர்ந்தது. இந்த நிகழ்வு சிறப்புற பணியாற்றிய ஆசிரியர்களுக்கும், ஆசிரியைகளுக்கும் அரிமா சங்க கவர்னர் நினைவுப் பரிசுகளை வழங்கி கவுரவித்தார். அறிவியல் கண்காட்சியின் துவக்க விழாவிற்கு சென்ற வருட மாவட்ட ஆளுநர் பி எம் ஜே எஃப் லயன். முகமது நவீன் இரண்டாம் துணை நிலை ஆளுநர் பி எம் ஜே எஃப் லயன். எஸ். போஸ் ஆகியோர் கலந்து கொண்டு சிறப்பித்தனர். மேலும் இவ்விழாவில் அயன்புரம் நாடார் உறவின்முறைச் சங்க நிர்வாகிகளும், ஊ.பு.அ.சௌந்திரபாண்டியன் ஆரம்ப மற்றும் மேல் நிலைப் பள்ளியின் நிர்வாகிகளும்,காமராஜ் மெட்ரிகுலேஷன் மேல்நிலைப் பள்ளி நிர்வாகிகளும், காமராஜ் அகாடமியின் நிர்வாகிகளும் கண்காட்சி நடைபெறும் அறைகளை ரிப்பன் வெட்டி துவக்கி வைத்தார்கள்.

அறிவியல் கண்காட்சியின் இறுதியில் நடைபெற்ற பரிசளிப்பு விழாவின் நிறைவில் தலைமை ஆசிரியை ரா.சு லதா நன்றியுரையாற்றினார். தேசிய கீதத்துடன் விழா இனிதே நிறைவுற்றது.

# அகர்சந்த் மான்மல் ஜெயின் கல்லூரியில் மாபெரும் முன்னாள் மாணவர்களின் சங்கமம் - வெற்றிகளும் மீள் நினைவுகளும். ஏ எம் ஜி சி முன்னாள் மாணவர் சங்கம் - “வேர்கள்“ - கடந்த கால உறவுகளை இணைக்கும் அறிமுக விழா . 1961 முதல் இன்று வரையிலும் 2000 க்கும் மேற்பட்ட முன்னாள் மாணவர்களின் சந்திப்பும், சாதனைப் பகிர்தல்களும்.







சென்னை, 27 ஜனவரி 2024: சென்னையில் உள்ள முன்னணி கல்வி நிறுவனமான அகர்சந்த் மான்மல் ஜெயின் கல்லூரி, முன்னாள் மாணவர் சந்திப்பு தினத்தை ஜனவரி 26, 2024 அன்று மிகச் சிறப்பாகக் கொண்டாடியது. இந்த நிகழ்வில் சுமார் 2000 முன்னாள் மாணவர்கள் ஆர்வத்துடன் கலந்துகொண்டனர். தங்களின் கல்லூரிக் கால நண்பர்களையும், நினைவலைகளையும் , வெற்றிச் சம்பவங்களையும் நினைவு கூர்ந்தனர்.

முன்னாள் மாணவர் சந்திப்பில் பல கலை நிகழ்வுகள் இடம்பெற்றன, முன்னாள் மாணவர்கள் தங்கள் திறமைகளையும் படைப்பாற்றலையும் வெளிப்படுத்துவதற்கான முன்னேற்பாடுகள் செய்யப்பட்டிருந்தன.மீள் நினைவுகளைப் பறைசாற்றிய 'புகைப்படத் தொகுப்புகளின்' திறப்பு விழா, முன்னாள் மாணவர்கள் தங்களின் கல்லூரிக் கால மலரும் நினைவுகளை திரும்பிப் பார்க்க வைத்தது. அவர்களுக்காக ஏற்பாடு செய்யப்பட்டிருந்த விளையாட்டுப் போட்டிகள் அனைவரையும் ஈர்க்கக் கூடிய உற்சாக சூழலோடு அமைந்திருந்தது.

அகர்சந்த் மான்மல் ஜெயின் கல்லூரியின் முதல்வர் டாக்டர் என். வெங்கடரமணன் அவர்கள் கூறுகையில், "முன்னாள் மாணவர் சந்திப்பு நிகழ்வு, பழமையை நினைவுகூறும் எங்கள் நிறுவனத்தின் மனப்பான்மையைப் பறைசாற்றுகிறது. எங்கள் மாணவர்கள் பல்வேறு துறைகளில் குறிப்பிடத்தக்க தங்களின் பங்களிப்பை அளித்து வருவதோடு, உலகில் தனி முத்திரையைப் பதித்து வருவது மகிழ்ச்சி அளிக்கிறது. புதிதாகத் தொடங்கப்பட்டுள்ள ஏ எம் ஜி சி முன்னாள் மாணவர் சங்கமான 'வேர்கள்' , பழமையை மீட்டெடுக்கும் வலுவான பிணைப்பைப் பேணுவதில் முக்கியப் பங்கு வகிக்கும்.முன்னாள் மாணவர்களுடனான எங்கள் தொடர்பு, தொடர்ந்து நீடிக்கவும், கல்லூரியுடன் அவர்கள் தொடர்ந்து கைகோர்த்துப் பயணம் செய்யவும் விரும்புகிறோம். அவர்கள் பகிர்ந்துக் கொண்ட வழிகாட்டுதல்களும் அனுபவங்களும் தற்போதைய மாணவர்கள், அவர்களின் கல்வி மற்றும் தொழில்முறை பயணங்களை நம்பிக்கையுடன் முன்னெடுத்துச் செல்ல வழிகாட்டும் வகையில் அமைந்திருந்தது" என்றார்.

அகர்சந்த் மான்மல் ஜெயின் கல்லூரியின் செயலர் திரு. உதன் குமார் சோர்டியா, அவர்கள் கூறுகையில் "எங்கள் முன்னாள் மாணவர்கள் குறித்து நாங்கள் பெருமிதமும் மகிழ்ச்சியும் அடைகிறோம்.. கல்லூரியில் அவர்கள் பெற்ற தரமான கல்வியே அவர்களின் தற்கால சமூக நிலைப்பாட்டுக்கு அடித்தளம் என்பதற்கு அவர்களின் வாழ்க்கையே சான்றாக உள்ளது. அவர்களின் சாதனைகள் எங்கள் நிறுவனத்தின் சிறப்பைப் பிரதிபலிக்கின்றன. ஏ எம் ஜி சி முன்னாள் மாணவர் சங்கமான - 'வேர்கள்' முன்னாள் மாணவர்கள் தொடர்ந்து கல்லூரியுடன் இணைந்திருக்கவும், அனுபவங்களைப் பகிர்ந்து கொள்ளவும், கல்லூரியின் வளர்ச்சிக்கு பங்களிக்கும் ஒரு தளமாகவும் செயல்படும்" என்றார்.

கல்லூரி தொடர்ந்து வளர்ச்சியடைந்து வரும் சூழலில், அதுமேலும், தற்போதைய மற்றும் எதிர்கால மாணவர்களுக்கு சிறந்த கல்வி மற்றும் கல்விசார் வசதிகளை உருவாக்கிக் கொடுக்க வேண்டுமென்பதில் உறுதியாக உள்ளது. பட்டம் பெற்றுச் சென்றுள்ள முன்னாள் மாணவர்களின் சந்திப்பு நிகழ்வு அகர்சந்த் மான்மல் ஜெயின் கல்லூரியின் பெருமைமிகு பாரம்பரியத்தை நினைவூட்டுகிறது.

"printed by R.SATHYANARAYANAN and published by R.SATHYANARAYANAN on behalf of R.SATHYANARAYANAN and printed at Chennai Offset Printers No.19/1, 21/2, Kitabath Khan Bhandur street, Ellis Road, Chennai-600 002, and published at No.11, South Perumal Koil Street, Vadapalani, Chennai - 600 026 Editor R.SATHYANARAYANAN"

# முன்பு கண்டிராத ஒரு தாக்குதல்

## கௌதம் அதானி

சென்னை, 27 ஜனவரி 2024: சரியாக ஒரு வருடத்திற்கு முன்பு 25 ஜனவரி 2023 அன்று, நியூயார்க்கில் உள்ள ஒரு ஷார்ட் செல்லர் அதானி குழுமத்திற்கு எதிரான ஒரு குற்றச்சாட்டுகளின் தொகுப்பை ஆன்லைனில் வெளியிட்டார் என்ற செய்தி காலை உணவின் போது வந்தது.

ஊடகங்களில் என்னைக் குறைகூறுபவர்கள் அவர்களை மறைத்து தங்கள் கூட்டாளிகள் மூலம் மீண்டும் எழுப்ப முயன்ற அதே காலாவதியான குற்றச்சாட்டுகள் அபத்தமாக, ஒரு 'ஆராய்ச்சி அறிக்கை' என்று சுயமாகப் பாவனை செய்த அதில் இருந்தன. மொத்தத்தில், இது வெளிப்படுத்தப்பட்ட மற்றும் பொதுவில் கிடைக்கக்கூடிய தகவல்களிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட ஒரு தந்திரமாக வடிவமைக்கப்பட்ட அரை உண்மைகளின் தொகுப்பாக இருந்தது.

எங்கள் மீது கூறப்பட்ட பொய்களும் ஆதாரமற்ற குற்றச்சாட்டுகளும் ஒன்றும் புதியவை அல்ல எனவே, ஒரு விரிவான பதிலை வெளியிட்ட பிறகு, நான் அதைப் பற்றி யோசிக்கவில்லை.

இருப்பினும், உண்மை புறப்பட ஆயத்தமானபோது, ஒரு பொய் உலகைக் கடந்துவிட்டது! சத்தியத்தின் சக்தியின் ஒரு பிரதான போஷிப்பில் வளர்ந்த எனக்கு, இந்தத் தாக்குதல் பொய்களின் சக்தியைப் பற்றிய ஒரு பாடமாக இருந்தது.

தரக்குறைவான தாக்குதல்களின் தாக்கம், பொதுவாக நிதிச் சந்தைகளில் மட்டுமே இருக்கும். எவ்வாறாயினும், இது நிச்சயமாக நிதி சார்ந்த ஒன்றாக மற்றும் அரசியல் வெளியில் ஊடுருவிய ஒன்றாகவும் ஒவ்வொன்றும் மற்றொன்றுக்கு தீனி அளிக்கும் ஒரு தனித்துவமான இரு பரிமாணத் தாக்குதலாகும். பொதுவாக, மூலதனச் சந்தைகள் பகுத்தறிவை விட உணர்ச்சிகரமானவையாக இருப்பதால் ஊடகங்களில் சிலரின் உதவியுடனும், உடந்தையுடனும் , எங்களுக்கு எதிரான இந்த பொய்கள் எங்கள் போர்ட்ஃபோலியோவின் சந்தை மூலதனத்தை கணிசமாக குறைக்கும் அளவுக்கு போதுமான அளவு அழிவுகரமானவையாக இருந்தன. எனக்கு இன்னும் வேதனை என்னவென்றால் ஆயிரக்கணக்கான சிறு முதலீட்டாளர்கள் தங்கள் சேமிப்பை இழந்துள்ளனர். எங்கள் எதிர்ப்பாளர்களின் திட்டம் முழுமையாக வெற்றி பெற்றிருந்தால், எந்த நாட்டிற்கும் ஒரு பேரழிவு நிலையான, இந்த தொற்று விளைவுகள், துறைமுகங்கள் மற்றும் விமான நிலையங்கள் முதல் மின்சார விநியோகச் சங்கிலி வரையிலான பல முக்கியமான உள்கட்டமைப்பு சொத்துக்களை முடக்கியிருக்கும். எவ்வாறாயினும், எங்களின் உறுதியான சொத்துக்கள், எங்கள் செயல்பாடுகளின் உறுதியான தன்மை மற்றும் எங்கள் வெளிப்படுத்தல்களின் உயர் தரத்தின் காரணமாக கடன் வழங்குபவர்கள் மற்றும் மதிப்பீட்டு ஏஜென்சிகள் உட்பட அதிக தகவலறிந்த நிதி சமூகம், புழக்கத்தில் உள்ள பொய்களால் திசைதிருப்ப மறுத்து எங்களுடன் உறுதியாக நின்றது.

இந்தச் சூழலைக் கையாளுவதற்கு முன்னோடியான பாதை எதுவும் எங்களிடம் இல்லாதிருந்தது. இறுதியில், எங்கள் வணிகங்களின் திடத்தன்மையின் மீதான எங்கள் நம்பிக்கையானது எங்களின் பெரும்பாலும் முரண்பாடான மூலோபாயத்தை ஆணையிட்டது. முதலீட்டாளர்களைப் பாதுகாப்பதே எங்களது முதல் முடிவாக இருந்தது .ரூ. 20,000 கோடி எஃப் பி ஓ முடித்த பிறகு, எஃப் பி ஓ வருவாயைத் திருப்பித் தர முடிவு செய்தோம். கார்ப்பரேட் வரலாற்றில் முன்னோடியில்லாத வகையில் இந்த நடவடிக்கை, முதலீட்டாளர் நலன் மற்றும் நெறிமுறை வணிக நடைமுறைகளுக்கான எங்கள் உறுதிப்பாட்டை முக்கியப்படுத்திக் காட்டுகிறது.



இந்தப் போரின் குழப்பமான சூழலில், போதுமான பணப்புழக்கம்தான் எங்களின் மிகப்பெரிய ஆயுதமாக இருந்தது. ரூ. 30,000 கோடியின் வலுவான ரொக்க கையிருப்பை அதிகரிக்க, அடுத்த இரண்டு ஆண்டுகளுக்கு கடனை திருப்பிச் செலுத்துவதற்கு சமமான ரூ. 40,000 கோடியை கூடுதலாக திரட்டி, எங்கள் குழும நிறுவனங்களின் பங்குகளை ஜி கியூ ஜி பார்ட்னர்கள் மற்றும் கியூ ஐ ஏ போன்ற உலக அளவில் மாசற்ற முதலீட்டாளர்களுக்கு விற்பனை செய்வதன் மூலம் எங்கள் நிதி நிலையை நாங்கள் மேலும் பலப்படுத்தினோம். இது, பண கையிருப்பு, சந்தைகளில் நம்பிக்கையை மீட்டெடுப்பது மற்றும் இந்தியாவுக்கான உலகத் தரம் வாய்ந்த உள்கட்டமைப்பு சொத்துக்களை உருவாக்குதல் ஆகியவற்றின் நோக்கங்களைச் செயல்படுத்தியது.

ரூபாய்17,500 கோடி மார்ஜின் - இணைக்கப்பட்ட நிதியை முன்கூட்டியே செலுத்துவதன் மூலம், சந்தை ஏற்ற இறக்கத்தில் இருந்து எங்கள் போர்ட்ஃபோலியோவை நாங்கள் காப்பிட்டு பாதுகாக்கிறோம். எனது தலைமைக் குழுவை வணிகங்களில் கவனம் செலுத்துமாறு கேட்டுக் கொண்டேன். இது நிதியாண்டு 24 இன் முதல் பாதியில், அதானி போர்ட்ஃபோலியோ நிதியாண்டு 24 இன் மூன்றாம் காலாண்டில் இதுவரை இல்லாத காலாண்டு லாபத்தை வழங்கியதன் மூலம் ஈ பி ஐ டி டி ஏ வளர்ச்சி 47% என்ற சாதனை முறியடிப்புக்கு வழி வகுத்தது. எங்களின் தற்காப்பு தான் எதிர்கொள்கின்றது

எங்கள் நிதி மற்றும் நிதி அல்லாத பங்குதாரர்களுக்காக ஒரு விரிவான ஈடுபாடு திட்டத்தை செயல்படுத்தினோம். நிதிக் குழு மட்டும் ஆரம்ப 150 நாட்களில் உலகம் முழுவதும் கிட்டத்தட்ட 300 கூட்டங்களை நடத்தியது, ஒன்பது ரேட்டிங் ஏஜென்சிகளால் 104 நிறுவனங்களில் மதிப்பீடுகளை உறுதி செய்வதை உறுதி செய்தது. வங்கிகள், நிலையான வருமான முதலீட்டாளர்கள், இறையாண்மை சொத்து நிதிகள், சமபங்கு முதலீட்டாளர்கள், ஜெவி பங்குதாரர்கள் மற்றும் ரேட்டிங் ஏஜென்சிகள் எப்பொழுதும் எங்களின் முக்கிய பங்குதாரர்களாக உள்ளனர், ஏனென்றால், அவர்கள் நடத்தும் உரிய விடாமுயற்சி, ஆய்வு மற்றும் மதிப்புரைகள் தான் எங்கள் விரிவான மற்றும் வெளிப்படையான வெளிப்படுத்தல் ஆளுமைக்கு அடித்தளமாக உள்ளது.

எங்களைத் தாக்கியவர்களின் நோக்கங்களை அம்பலப்படுத்த, உண்மைகளை வெளிப்படையாகக் கோடிட்டுக் காட்டுவதிலும் எங்கள் தரப்பிலிருந்து நடந்ததைச் சொல்வதிலும் நாங்கள் கவனம் செலுத்தினோம். இது எங்கள் குழுவிற்கு எதிரான எதிர்மறையான பிரச்சாரங்களின் தாக்கத்தைக் குறைக்க வழிவகுத்தது. ஃபாலோ-ஆன் பொது வழங்கலின் ஒரு முக்கிய நோக்கமாக இருந்த எங்களின் பங்குதாரர் தளத்தின் குறிப்பிடத்தக்க வளர்ச்சியானது பொதுப் பார்வையில் ஏற்பட்டுள்ள மாற்றத்திற்கான ஒரு சான்றாக உள்ளது. இந்த சவாலான ஆண்டில், எங்களது பங்குதாரர் தளம் 43% அதிகரித்து, கிட்டத்தட்ட 70 லட்சத்தை எட்டியது.

கூடுதலாக, நாங்கள் எங்கள் வளர்ச்சி வேகத்தைத் தக்கவைக்க உறுதியுடன் இருந்தோம். 4.5 லட்சம் கோடி ரூபாயாக எங்களின் சொத்துத் தளம் அதிகரித்ததன் மூலம், குழுமம் தொடர்ந்து முதலீடுகளைச் செய்து வருகிறது. இந்த காலகட்டத்தில் கவ்டா இல் உலகின் மிகப்பெரிய புதுப்பிக்கத்தக்க எரிசக்தி உற்பத்தி தளம், ஒரு புதிய தாமிர உருக்காலை, ஒரு கிரீன் ஹைட்ரஜன் சுற்றுச்சூழல் அமைப்பு மற்றும் நீண்டகாலமாக எதிர்பார்க்கப்பட்ட தாராவி இன் மறுசீரமைப்பு உள்ளிட்ட பல முக்கிய திட்டங்கள் தொடங்கப்பட்டன.

பின்னோக்கிப் பார்த்தால், நாங்கள் எங்கள் அவுட்ரீச் வழிமுறைகளில் போதுமான கவனம் செலுத்ததால் இந்த நெருக்கடி, நான் வளர அனுமதித்த ஒரு அடிப்படை பலவீனத்தை வெளிப்படுத்தியது. அதானி குழுமம் செய்த அல்லது செய்துகொண்டிருந்தவற்றின் அகலம், ஆழம் மற்றும் தரம் ஆகியவை உள்கட்டமைப்பு நிதி சமூகத்திற்கு வெளியே சிலருக்குத் தெரியும். எங்களுடைய நிதியல்லாதவர்கள் அனைவரும், எங்கள் நிதிகள் வலுவானவை, எங்கள் நிர்வாகம் குறைபாடற்றது, வளர்ச்சிக்கான எங்கள் பாதை அளவிடப்பட்டது , மேலும் இந்தியாவின் முக்கியமான உள்கட்டமைப்பை உருவாக்குவதில் நாங்கள் முக்கியப் பங்காற்றுகிறோம் என்பதில் எங்களைப் பற்றியும் எங்களைப் பற்றிய உண்மைகளையும் அறிந்திருக்கிறார்கள் என்று நாங்கள் அனைவரும் அப்பாவியாக நம்பியிருந்தோம். இந்த அனுபவம், எங்கள் நிதி அல்லாத பங்குதாரர்களுடன் திறம்பட ஈடுபட வேண்டியதன் அவசியத்தை அடிக்கோடிட்டுக் காட்டுகிறது. எங்களின் கடன் அளவுகளின் திரிக்கப்பட்ட கதைகள் மற்றும் அரசியல் சார்பு பற்றிய ஆதாரமற்ற குற்றச்சாட்டுகளை முன்கூட்டியே எதிர்க்க நாங்கள் தவறிவிட்டோம், இதன் விளைவாக தவறான கருத்துக்கள் பரவியது. உண்மை என்னவென்றால், எங்கள் வகை பயன்பாட்டு மற்றும் போக்குவரத்து நிறுவனங்களுக்கு மிகக் குறைவான கடன்-ஈ பி ஐ டி டி ஏ விகிதமான ஒன்றை நாங்கள் கொண்டுள்ளோம். (செப்டம்பர் 2023 இல் முடிவடைந்த அரையாண்டில் இது 2.5 மடங்காக இருந்தது.) மேலும், பல்வேறு அரசியல் கட்சிகளால் நடத்தப்படும் 23 இந்திய மாநிலங்களில் எங்கள் உள்கட்டமைப்பு வணிக தடம் பரவியிருப்பதால் நாங்கள் உண்மையான அரசியலற்றவர்கள்.

கடந்த வருடத்தின் சோதனைகள் மற்றும் இன்னல்கள் மதிப்புமிக்க பாடங்களை எங்களுக்குக் கற்பித்துள்ளன, எங்களை வலிமையாக்கின மற்றும் இந்திய நிறுவனங்களில் எங்கள் நம்பிக்கையை மீண்டும் உறுதிப்படுத்தின. எங்கள் மீதான இந்த வஞ்சகமான தாக்குதல் - மற்றும் நமது வலுவான எதிர் நடவடிக்கைகள் - சந்தேகத்திற்கு இடமின்றி ஒரு வழக்கு ஆய்வாக மாறும் போது, நான் எனது கற்றலைப் பகிர்ந்து கொள்ள நிர்ப்பந்திக்கப்பட்டேன் , ஏனெனில், அது இன்று நாமாக இருந்தோம் நாளை அது வேறொருவராக இருக்கலாம். இது போன்ற தாக்குதல்கள் முடிந்துவிட்டது என்ற எந்த மாயையிலும் நான் இல்லை. இந்த அனுபவத்திலிருந்து நாங்கள் இன்னும் வலுவாக வெளிப்பட்டுள்ளோம், மேலும் இந்தியாவின் வளர்ச்சிக் வரலாற்றில் எங்களது பணிவான பங்களிப்பைத் தொடர வேண்டும் என்ற எங்கள் தீர்மானத்தில் இன்னும் அசையாதவர்களாக இருக்கிறோம் என்று நான் நம்புகிறேன்.

(ஆசிரியர் அதானி குழுமத்தின் தலைவர்.)

# தேசிய விருது பெற்ற இசையமைப்பாளர் ஸ்ரீகாந்த் தேவா இசையில் முதல் முறையாக முருகன் பாடல் யோகிபாபு மற்றும் நட்டி வெளியிட்ட பக்தி பரவசமூட்டும் 'முருகனே செல்ல குமரனே' பாடலை தைப்பூசத்தை முன்னிட்டு வர்ஷேனியம் ரிகார்ட்ஸ் உலகமெங்கும் வெளியிடுகிறது

சென்னை, 27 ஜனவரி 2024: சமீபத்தில் தேசிய விருது பெற்று தமிழ் திரையுலகுக்கு பெருமை சேர்த்த பிரபல இசையமைப்பாளர் ஸ்ரீகாந்த் தேவா, முருகப்பெருமான் குறித்த பக்தி பரவசமூட்டும் பாடல் ஒன்றுக்கு முதல் முறையாக இசையமைத்துள்ளார்.







தேசிய விருது பெற்ற இயக்குந□ர் பவண் வரிகளில் உருவாகியுள்ள இப்பாடலை தைப்பூசத்தை முன்னிட்டு வர்ஷேனியம் ரிகார்ட்ஸ் உலகமெங்கும் வெளியிடுகிறது. முன்னதாக, ஆடியோவாகவும், வீடியோவாகவும் சிறப்பாக உருப்பெற்றுள்ள இந்த பாடலை பிரபல நடிகரும் முருக பக்தருமான யோகிபாபுவும், பிரபல ஒளிப்பதிவாளர் மற்றும் நடிகர் நட்டியும் வெளியிட்டனர்.

'சூப்பர் சிங்கர்' வெற்றியாளர் ஸ்ரீநிதா மற்றும் சூப்பர் சிங்கர் 'செல்லக்குட்டி பேபி' அக்ஷரா லக்ஷ்மி பாடியுள்ள 'முருகனே செல்ல குமரனே' பாடல் உலகெங்கும் வாழும் முருக பக்தர்கள் மெய் சிலிர்த்து கொண்டாடும் வகையில் உருவாகியுள்ளது.

இந்த பாடலைப் பற்றி ஸ்ரீகாந்த் தேவா கூறுகையில், "வர்ஷேனியம் ரிகார்ட்ஸ் மூலம் வெளியாக உள்ள 'முருகனே செல்ல குமரனே' பாடல் முருக கடவுளின் பாடல்களில் வரும் காலங்களில் முக்கிய இடத்தை பெறும். முருகப்பெருமானைப் பற்றி குழந்தைகள் கூட பக்தியோடு பாட வேண்டும் என்ற நோக்கத்தில் எளிய மெட்டில், எளிய தமிழில் இதை உருவாக்கியிருக்கிறோம். இந்த பாடலை கேட்டு தைப்பூசத்தில் முருகனை தரிசனம் செய்து, முருக பக்தியில் எந்நாளும் திளைத்திடுவோம்," என்றார்.

பாடலை எழுதிய இயக்குநர் பவண், "இந்த வாய்ப்பை மிகப்பெரிய பாக்கியம் என்றே சொல்ல வேண்டும். சொல்ல சொல்ல இனிக்கும், அள்ள அள்ள அருளும் முருகப்பெருமானை பற்றிய அருமையான பாடல் அவன் அருளாலே மிகவும் சிறப்பாக உருப்பெற்றுள்ளது. வெற்றிவேல் முருகனுக்கு அரோகரா," என்றார்.

நடிகர் யோகிபாபுவும், நடிகரும் ஒளிப்பதிவாளருமான நட்டியும் வர்ஷேனியம் ரிகார்ட்ஸ் லேபிளில் தேசிய விருது பெற்ற இசையமைப்பாளர் ஸ்ரீகாந்த் தேவா இசையில் உருவாகியுள்ள 'முருகனே செல்ல குமரனே' பாடலை வெளியிட்டது குறித்து மகிழ்ச்சி தெரிவித்தனர்.